உனக்குத் தெரியுமா?

நீ உன் பள்ளியில் இன்பச் சுற்றுலா சென்ற அனுபவம் உண்டா?

ஆம் ☐ இல்லை ☐

மலைகள், அருவிகள், ஆறுகள், குளங்கள், ஏரிகள் பார்த்த அனுபவம் உண்டா?

ஆம் ☐ இல்லை ☐

கடற்கரைச் சென்று கடல் அலைகளில் விளையாடிய அனுபவம் உண்டா?

ஆம் ☐ இல்லை ☐

வெண்பனி மூடிய மலைகளைப் படங்களில் பார்த்து ரசித்தது உண்டா?

ஆம் ☐ இல்லை ☐

தாவி தாவி விளையாடும் குரங்குகள்!
அழகாக பாடும் குயில்கள்!
பேசும் கிளிகள்!
தோகை விரித்து ஆடும் மயில்கள்!
பார்ப்பதற்கு மலை போன்ற
யானைகள்!
தண்ணீரில் நீந்தும் மீன்கள்!
செல்லமாய் வளர்க்கும் நாய்!
வீட்டில் வளரும் பூனை!
துள்ளி குதிக்கும் மான்கள்!
இவைகளை எல்லாம் பார்த்து ரசித்த
அனுபவம் உண்டா?

ஆம் ☐ இல்லை ☐

இராத்திரியில் மின்னும்
நட்சத்திரங்களையும்,
நிலாவையும், பகலில்
ஒளிவீசும் சூரியனையும்
பார்த்து ரசித்த அனுபவம்
உண்டா?
வானத்திலிருந்து
பொழியும் மழையில்
விளையாடினது உண்டா?
மழைக்காலங்களில்
தோன்றும் வானவில்லை
பார்த்திருக்கிறாயா?

ஆம் ☐ இல்லை ☐

இவைகள் எல்லாம் இந்தப் பூமியை தவிர வேறு எங்காவது பார்க்க முடியுமா? முடியாது. ஏனென்றால் இவைகளையெல்லாம் யாருக்காக கடவுள் உண்டாக்கினார் தெரியுமா?

மனிதர்களுக்காகவே, அதாவது உனக்காகவும், எனக்காகவும் தானாம். நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கும், கடவுளோடு சேர்ந்து மகிழ்ச்சியோடு வாழ்வதற்கும் தான். இந்தப் பூமியை சகல வசதிகளோடு கடவுள் உண்டாக்கினார் என்று பரிசுத்த வேதத்தில் எழுதியிருக்கிறது என்று உனக்கு தெரியுமா? பரிசுத்த வேதத்தில் எப்படி கடவுள் மனிதர்களை உண்டாக்கினார் என்பதை வாசிப்போமா?

பரிசுத்த வேதாகமத்தில், ஆதியாகமம் 1ம் அதிகாரம் முதல் 2ம் அதிகாரத்தில் 23ம் வசனங்கள் வரை

ஆதியாகமம் 1

1. தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்தபொழுது,



2. மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது.

3. அப்பொழுது கடவுள், “ஒளி தோன்றுக!” என்றார்; ஒளி தோன்றிற்று. கடவுள் ஒளி நல்லது என்று கண்டார்.

4. கடவுள் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார்.

5. கடவுள் ஒளிக்குப் ‘பகல்’ என்றும் இருளுக்கு இரவு என்றும் பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று முதல் நாள் முடிந்தது.

6. அப்பொழுது கடவுள், “நீர்த்திரளுக்கு இடையில், வானம் தோன்றுக! அது நீரினின்று நீரைப் பிரிக்கட்டும்” என்றார்.

7. கடவுள் வானத்தை உருவாக்கி வானத்திற்குக் கீழுள்ள நீரையும் வானத்திற்கு மேலுள்ள நீரையும் பிரித்தார். அது அவ்வாறே ஆயிற்று.

8. கடவுள் வானத்திற்கு ‘விண்ணுலகம் என்று பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று இரண்டாம் நாள் முடிந்தது.

9. அப்பொழுது கடவுள், ‘‘விண்ணுலகுக்குக்’ கீழுள்ள நீர் எல்லாம் ஓரிடத்தில் ஒன்றுசேர உலர்ந்த தரை தோன்றுக!’’ என்றார். அது அவ்வாறே ஆயிற்று.

10. கடவுள் உலர்ந்த தரைக்கு ‘நிலம்’ என்றும் ஒன்றுதிரண்ட நீருக்குக் கடல் என்றும் பெயரிட்டார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

11. அப்பொழுது கடவுள், புற்பூண்டுகளையும் விதைத் தரும் செடிகளையும், கனி தரும் பழமரங்களையும் அந்தந்த இனத்தின்படியே நிலம் விளைவிக்கட்டும் என்றார். அது அவ்வாறே ஆயிற்று.

12. புற் பூண்டுகளையும் விதையைப் பிறப்பிக்கும் செடிகளையும் கனிதரும் மரங்களையும் அந்தந்த இனத்தின்படி நிலம் விளைவித்தது. கடவுள் அது நல்லது என்று கண்டார்.

13. மாலையும், காலையும் நிறைவுற்று மூன்றாம் நாள் முடிந்தது.

14. அப்பொழுது கடவுள், ‘‘பகலையும் இரவையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும் காலங்கள், நாட்கள், ஆண்டுகள் ஆகியவற்றைக் குறிப்பதற்கும் விண்விரிவினில் ஒளிப்பிழம்புகள் தோன்றுக!

15. அவை மண்ணுலகிற்கு ஒளிதர விண்விரிவினில் ஒளிப்பிழம்புகளாக இருக்கட்டும்’’ என்றார். அது அவ்வாறே ஆயிற்று.

16. கடவுள் இருபெரும் ஒளிப்பிழம்புகளை உருவாக்கினார். பகலை ஆள்வதற்குப் பெரிய ஒளிப்பிழம்பையும், இரவை ஆள்வதற்குச் சிறிய ஒளிப்பிழம்பையும் மற்றும் விண்மீன்களையும் அவர் உருவாக்கினார்.

17. கடவுள் மண்ணுலகிற்கு ஒளிதர, விண்ணுலக வானத்தில் அவற்றை அமைத்தார்.

18. பகலையும் இரவையும் ஆள்வதற்கும் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும் அவற்றை அமைத்தார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

19. மாலையும் காலையும் நிறைவுற்று நான்காம் நாள் முடிந்தது.

20. அப்பொழுது கடவுள், ‘‘திரளான உயிரினங்களைத் தண்ணீர் தோற்றுவிப்பதாக! விண்ணுலக வானத்தில் நிலத்திற்கு மேலே பறவைகள் பறப்பனவாக!’’ என்றார்.

21. இவ்வாறு, கடலின் பெரும் பாம்புகளையும், திரள் திரளாக நீரில் நீந்தி வாழும் உயிரினங்களையும், இறக்கையுள்ள எல்லாவிதப் பறவைகளையும் அவ்வவற்றின் இனத்தின்படி கடவுள் படைத்தார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

22 கடவுள் அவற்றிற்கு ஆசி வழங்கி, ‘‘பலுகிப் பெருகிக் கடல் நீரை நிரப்புங்கள். பறவைகளும் மண்ணுலகில் பெருகட்டும்’’ என்றுரைத்தார்.

23 மாலையும் காலையும் நிறைவுற்று, ஐந்தாம் நாள் முடிந்தது.

24 அப்பொழுது கடவுள், கால்நடைகள், ஊர்வன, காட்டுவிலங்குகள் ஆகியவற்றை அவ்வவற்றின் இனத்தின்படி நிலம் தோற்றுவிப்பதாக என்றார்.

25. கடவுள் காட்டு விலங்குகளையும் கால்நடைகளையும் நிலத்தில் ஊர்வன யாவற்றையும் அவ்வவற்றின் இனத்தின்படி உருவாக்கினார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

26. அப்பொழுது கடவுள்,
மானிடரை நம் உருவிலும்,
நம் சாயலிலும் உண்டாக்குவோம்.
அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப்
பறவைகளையும், கால்நடைகளையும்,
மண்ணுலகு முழுவதையும், நிலத்தில்
ஊர்வன யாவற்றையும் ஆளட்டும் என்றார்.

27. கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்; கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.

28. கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்; கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்றார்.

29. அப்பொழுது கடவுள், "மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன்; இவை உங்களுக்கு உணவாகட்டும்."

30. “எல்லாக் காட்டுவிலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன்” என்றார். அது அவ்வாறே ஆயிற்று.

31. கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன. மாலையும் காலையும் நிறைவுற்று ஆறாம் நாள் முடிந்தது.

ஆதியாகமம் 2

1. விண்ணுலகும் மண்ணுலகும் அவற்றில் உள்ள அமைப்புகள் அனைத்தும் உருவாக்கப் பெற்று நிறைவெய்தின.

2. மேலும் கடவுள் தாம் செய்த வேலையை ஏழாம் நாளில் முடித்திருந்தார். அவர் தாம் செய்த வேலைகள் அனைத்தையும் நிறைவுபெறச்செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்.

3. கடவுள் ஏழாம் நாளுக்கு ஆசி வழங்கி, அதைப் புனிதப்படுத்தினார். ஏனெனில் கடவுள் தாம் செய்த படைப்பு வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச் செய்து அந்நாளில்தான் ஓய்ந்திருந்தார்.

4. இவையே விண்ணுலக, மண்ணுலகப் படைப்பின் தோற்ற முறைமையாம். ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகையும், விண்ணுலகையும் உருவாக்கிய பொழுது,

5. மண்ணுலகில் நிலவெளியின் எவ்விதப் புதரும் தோன்றியிருக்கவில்லை; வயல்வெளியின் எவ்விதச் செடியும் முளைத்திருக்கவில்லை; ஏனெனில் ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகின்மேல் இன்னும் மழை பெய்விக்கவில்லை; மண்ணைப் பண்படுத்த மானிடர் எவரும் இருக்கவில்லை.

6. ஆனால் நிலத்திலிருந்து மூடுபனி எழும்பி நிலம் முழுவதையும் நனைத்தது.

7. அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்.

8.அண்டவராகிய கடவுள் கிழக்கே இருந்த ஏதேனில் ஒரு தோட்டம் அமைத்துத் தாம் உருவாக்கிய மனிதனை அங்கே வைத்தார்.

9. ஆண்டவராகிய கடவுள் கண்ணுக்கு அழகானதும் உண்பதற்குச் சுவையானதுமான எல்லா வகை மரங்களையும், தோட்டத்தின் நடுவில் வாழ்வின் மரத்தையும் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தையும் மண்ணிலிருந்து வளரச் செய்தார்.

10. தோட்டத்திற்குள் நீர் பாய்வதற்காக ஏதேனிலிருந்து ஆறு ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. அது அங்கிருந்து பிரிந்து நான்கு சிறப்புமிகு ஆறுகள் ஆயிற்று.

11. முதலாவதன் பெயர் பீசோன். இது கவீலா நாடு முழுவதும் வளைந்து ஓடுகின்றது. அங்கே பொன் விளையும்.

12. அந்நாட்டுப் பொன் பசும்பொன். அங்கே நறுமணப் பொருள்களும் வண்ண மணிக்கற்களும் உண்டு.

13. இரண்டாவது ஆற்றின் பெயர் கீகோன். இது எத்தியோப்பியா நாடு முழுவதும் வளைந்து ஓடுகின்றது.

14. மூன்றாவது ஆற்றின் பெயர் திக்ரீசு. இது அசீரியாவிற்குக் கிழக்கே, ஓடுகின்றது. நான்காவது ஆறு யூப்பிரத்தீசு.

15. ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்.

16. ஆண்டவராகிய கடவுள் மனிதனிடம், ‘‘தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம்.’’

17. ‘‘ஆனால் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே; ஏனெனில் அதை உண்ணும் நாளில் சாகவே சாவாய்;’’ என்று கட்டளையிட்டுச் சொன்னார்.

18. பின்பு ஆண்டவராகிய கடவுள், ‘‘மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று; அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்’’ என்றார்.

19. ஆண்டவராகிய கடவுள் மண்ணிலிருந்து எல்லாக் காட்டு விலங்குகளையும் வானத்துப் பறவைகளையும் உருவாக்கி, அவற்றிற்கு மனிதன் என்ன பெயரிடுவான் என்று பார்க்க, அவற்றை அவனிடம் கொண்டு வந்தார். உயிருள்ள ஒவ்வொன்றுக்கும் அவன் என்ன பெயரிட்டானோ அதுவே அதன் பெயராயிற்று.

20. கால்நடைகள், வானத்துப் பறவைகள், காட்டு விலங்குகள் ஆகிய எல்லாவற்றிற்கும் மனிதன் பெயரிட்டான்; தனக்குத் தகுந்த துணையையோ மனிதன் காணவில்லை.

21. ஆகவே ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச்செய்து, அவன் உறங்கும் பொழுது அவன் விலா எலும்பு ஒன்றை எடுத்துக்கொண்டு, எடுத்த இடத்தைச் சதையால் அடைத்தார்.

22. ஆண்டவராகிய கடவுள் தாம் மனிதனிடமிருந்து எடுத்த விலா எலும்பை ஒரு பெண்ணாக உருவாக்கி மனிதனிடம் அழைத்துவந்தார்.

23. அப்பொழுது மனிதன், இதோ! இவளே என் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள்; ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால், இவள் ‘பெண்’ என்று அழைக்கப்படுவாள் என்றான்.



இப்பொழுது உங்களுக்கு புரிந்திருக்கும்! மனிதனை கடவுள் மிகவும் நேசித்தார். சாப்பிடுவதற்கு பழங்கள், குடிப்பதற்கும், குளிக்கவும் சுத்தமான நதியும், வசிக்க ஏதேன் என்னும் தோட்டத்தையும், சுவாசிக்க நல்ல சுத்தமான காற்றையும், விளையாட மிருகங்களையும் கடவுள் மனிதனுக்கு இலவசமாகவே தந்தார். கூடவே மகிழ்ச்சியையும், கடவுளோடு பேசி அவரை பார்க்கவும், அவரோடு வாழவும் பாக்கியம் கொடுத்தார்.

ஏனெனில் கடவுள் மிகவும் அன்பாகயிருப்பார். அதே நேரத்தில் அவர் மிகவும் வல்லமையுள்ளவர். அவரோடு கோடிக்கணக்கான தேவ தூதர்கள் இருப்பார்கள். அவருக்கு உருவம் கிடையாது. அவர் ஆவியாக இருக்கிறார். அவரால் செய்ய முடியாது என்று எதுவுமே கிடையாது. அவர் சொன்னால் ஆகுமாம். அவர் கட்டளையிட்டால் எல்லாம் நிற்குமாம். அதுமட்டுமல்ல கடவுள் மிகவும் பரிசுத்தமுள்ளவராம். அதாவது ரொம்ப, ரொம்ப நல்லவர்.

இந்த கடவுளை பரிசுத்த வேதாகமத்தில் 'கர்த்தர்' என்று எழுதியிருக்காங்க. சரி! கடவுள் எங்கு இருக்காங்க தெரியுமா? அவர் எங்கும் இருக்கிறார், மிக முக்கியமாக அவர் இருக்கும் இடத்திற்கு 'பரலோகம்' என்று பெயர். சரி, இந்த பரலோகம் எப்படிப்பட்டது தெரியுமா?

ஆம் ☐ இல்லை ☐

(பரிசுத்த வேதாகமத்தில், வெளிப்படுத்தின விசேஷம் 21 மற்றும்

பரலோகம் மிகவும் வெளிச்சமாகயிருக்குமாம். பரலோகம் மிகவும் விலை உயர்ந்த பளிங்கு கற்களால் நிறைந்து இருக்குமாம். பரலோகத்தில் மரணமே கிடையாதாம்.

பரலோகத்தில் கடவுள் இருக்கிறார். மூன்றில் ஒன்றாக இருக்கிறார். பிதாவாகிய தேவன், மகனாகிய இயேசு கிறிஸ்து தேவன், பரிசுத்த ஆவியாகிய தேவன், மூன்றும் ஒன்றாகவே இருக்கிறார். அதாவது தண்ணீரானது எப்படி 1.பனிகட்டியாக, 2.நீராக, 3.நீராவியாக இருக்கிறதோ, அப்படி கடவுளும் ஒருவராக தான் இருக்கிறார், ஆனால் மூன்றில் ஒன்றாக இருக்கிறார். பரலோகத்தில் தேவ தூதர்கள் இருக்கிறார்கள்.

22ம் அதிகாரத்தில் பரலோகத்தைப் பற்றி எழுதப்பட்டுள்ளது.)

கடவுள் வசிக்கும் இடத்தில் நம்மையும் வாழ வைக்க விரும்புகிறார். நமக்கும் ஒரு இடத்தை வைத்திருக்கிறார். இந்த நல்ல செய்தி உனக்கு தெரியுமா?

கடவுள் நமக்கு ஆயத்தம் பண்ணுகிற அந்த பரலோகத்தில் சண்டையில்லை, பட்டினியில்லை, மிக முக்கியமாக பாவங்கள் இல்லவே இல்லை. பாவம் செய்கிறவர்கள் அங்கே போகவே முடியாதாம். அதனால் தான் பாவம் செய்த ஒரு கூட்ட தேவ தூதர்களை கடவுள் கீழே பூமியில் தள்ளிவிட்டார். அதை தான் நாம் சாத்தான், பேய், பிசாசு என்றுச் சொல்கிறோம். அது உனக்குத் தெரியுமா?

ஆம் ☐ இல்லை ☐

அப்ப ஏன் கடவுள் படைத்த இந்த அழகான பூமியிலே பசி பட்டினி, சண்டை, கொலை, கஷ்டங்கள் எல்லாம் இருக்கிறது உனக்குத் தெரியுமா?

ஆம் ☐ இல்லை ☐

கடவுள் படைத்த முதல் மனிதனாகிய ஆதாமையும், ஏவாளையும், சாத்தான் ஒரு பாம்பு வடிவத்தில் வந்து, வஞ்சமாக பேசி, ஆதாமையும், ஏவாளையும் நம்ப வைத்து, கடவுளுக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்ய வைத்தான்.

அதனால் கடவுள் ஆதாமை, ஏதேன் என்னும் தோட்டத்தை விட்டு வெளியே அனுப்பிவிட்டார். ஆதாம் மட்டும் சாத்தானின் வார்த்தைகளை நம்பாமல் கடவுளுடைய வார்த்தையை நம்பியிருந்தால், இன்றைக்கு நாம் நினைக்கிறது போல் இந்த பூமி சொர்க்கமாக இருந்திருக்கும்.

இப்பொழுதும் மக்கள் கடவுள் சொல்லை கேட்பதைவிட சாத்தான் சொல்வதைத்தான் அதிகமாக நம்புகிறார்கள். அதனால்தான் இத்தனை துன்பங்கள். சரி, ஒரு தப்பு தானே முதல் மனிதன் செய்தான், ஏன் கடவுள் அவனை தள்ளிவிட்டார் என்று தெரியுமா? கடவுளிடம் பாவம் இல்லை, ஆகவே பாவம் செய்கிறவர்களும் இருக்க முடியாது. அதனால் தான் கடவுள், மனிதன், சாத்தானால் ஏமாற்றப்பட்டதை எண்ணி பரிதாபப்பட்டார். "தன்னுடைய ஒரே மகனாகிய இயேசு கிறிஸ்து சாத்தானை நசுக்கிப் போடுவார்" என்ற நம்பிக்கை வாக்குறுதியைக் கொடுத்தார்.

இயேசு பாவத்தையும், சாத்தானையும் ஜெயித்தார் என்பது உனக்குத் தெரியுமா?

ஆம். தெய்வமாகிய இயேசு பரலோகத்தில் இருந்து மனிதனாக பிறக்க வேண்டும் அல்லவா, அதற்காக இன்னும் திருமணம் இன்னும் ஆகாத கன்னி மரியாளைத் தெரிந்தெடுத்து அவர்கள் வயிற்றில் இயேசு ஒரு மனிதனாக பிறந்தார். இயேசுவினிடத்தில் ஒரு பாவமும் இல்லாது இருந்தார். அவருடைய பரிசுத்தமான இரத்தம் நமக்காக சிலுவையில் சிந்தப்பட்டு மரித்தார், அவரை அடக்கம் பண்ணினார்கள். ஆனால் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்து வந்து இன்றைக்கு வரைக்கும் உயிரோடு இருக்கிறார். அதுமட்டுமா? நம் ஒவ்வொருவருக்காகவும் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். இதனால் நாம் எல்லாருடைய பாவமும் மன்னிக்கப்படுகிறது. நாம் பழையபடி ஆதாமை போல ஏதேன் தோட்டத்தில் கடவுளோடு இருந்தது போல, பரலோகத்தில் கடவுளோடு வாழும் பாக்கியம் கிடைக்கிறது.



- இயேசு உனக்காகப் பிறந்தார்!
- உனக்காக சிலுவையில் மரித்தார்!
- உனக்காக மீண்டும் உயிரோடு எழுந்தார்!
- இப்பொழுதும் உனக்காக வேண்டுதல் செய்கிறார்!

அப்படியென்றால் நாம் எல்லோருக்கும் பரலோகம் ஆயத்தமாக இருக்கிறதா?

யார் யாரெல்லாம் நாங்கள் பாவம் செய்துவிட்டோம் என்று செய்த பாவங்களையெல்லாம் சொல்லி இயேசுவிடம் மன்னிப்பு கேட்டு ஜெபம் செய்கிறாங்களோ, இயேசு தமது பரிசுத்தமான இரத்தத்தால் அவர்களை கழுவி சுத்தமாக்குவார், நாம் பரிசுத்தம் அடைவோம்.



இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களுக்கும், இயேசு பாவங்களை மன்னித்து ஒரு புதிய வாழ்க்கை தருவார் உனக்குத் தெரியுமா?

ஆம் ☐ இல்லை ☐

மனிதனாக இயேசு வாழ்ந்த காலத்தில், இயேசு செல்லும் இடம் எல்லாம் வியாதியுள்ள மக்கள் வந்து சுகமடைந்து போவார்கள். ஒருமுறை இயேசு ஒரு வீட்டிற்கு வந்திருப்பதை அறிந்த மக்கள் அந்த வீட்டை நோக்கி வந்தனர். பெரிய கூட்டம் கூடியது. அந்த ஊரில் ஒருவர், நடக்க முடியாதபடி படுத்த படுக்கையாய் பக்கவாதம் என்ற வியாதியினால் இருந்தார். அவரை இயேசுவிடம் கொண்டு போனால் நிச்சயமாய் சுகப்படுத்துவார் என்று நினைத்த அவனுடைய 4 நண்பர்கள், அந்த மனிதனை படுத்திருந்த கட்டிலோடு தூக்கி வந்தனர். கூட்டம் அதிகமாயிருந்தது அல்லவா? அதனால் அவர்களால் உள்ளே போக முடியவில்லை. வீட்டின் மேல்கூரையை பிரித்துவிட முடிவு செய்தனர். அதன்படி கூரையை பிரித்து கட்டிலோடு அந்த நண்பரை இறக்கினார்கள்.



இதைக் கவனித்துக் கொண்டிருந்த இயேசு, படுத்த படுக்கையாய் கிடந்த அந்த மனிதனைப் பார்த்து மிகவும் வருத்தப்பட்டார். அந்த மனிதனைப் பார்த்து, "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்றுச் சொன்னார். இதைச் சுற்றி நின்றவர்கள் கேட்டு மனசுக்குள்ளே கிண்டல் செய்தனர். இயேசு சும்மா சொல்கிறார் என்று நினைத்தனர். இதை அறிந்த இயேசு படுத்த படுக்கையாயிருந்த அந்த வியாதிப்பட்ட மனிதனைப் பார்த்து, 'உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நீ போ' என்று சொன்னாங்க. என்ன நடந்தது தெரியுமா? அந்த மனிதன் மெல்ல எழுந்தான், குதித்தான், தன்னுடைய படுக்கையை சுருட்டினான், இயேசுவுக்கு நன்றி சொல்லி கிளம்பினான். அப்பொழுது தான் சுற்றி நின்றிருந்த மக்களுக்கு புரிந்தது, பாவங்கள் மன்னிக்கப்பட்டதால் தான் இவனுக்கு சுகம் கிடைத்தது என்று.

இயேசுவால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்பது உனக்குத் தெரியுமா?

ஆம் ☐ இல்லை ☐

"ஒருமுறை இயேசு, தன்னுடைய 12 சீஷர்களோடு படகில் ஏறி அடுத்த கரைக்குப் போவோம் வாருங்கள்" என்று அழைத்தார்.

அதன்படி சீஷர்களும் இயேசுவும் படகில் ஏறிக் கொண்டார்கள். இயேசு ஊழியம் செய்து களைப்பில் இருந்தார். அதனால் படகில் கொஞ்சம் படுத்து ஓய்வு எடுத்தார்.

சீஷர்கள் படகை அக்கரைக்கு நேராக ஓட்டிச் சென்றார்கள். திடீரென காற்று வேகமாக வீசியது. கருப்பு மேகமாக மேகம் மாறியது, புயல் காற்று போல காற்று வீச ஆரம்பித்தது, அவர்கள் சென்றப் படகு மிகவும் தடுமாறியது. தண்ணீரில் மூழ்கிவிடுவது போன்ற ஒரு நிலைமை, சீடர்களுக்கு என்ன செய்வதென்று அறியாமல், தூங்கிக் கொண்டிருந்த இயேசுவைத் தட்டி எழுப்பினார்கள்.

இயேசு மெல்ல எழுந்து பார்த்தார். சீஷர்கள் எல்லாரும் மரண பயத்தில் இருந்தார்கள். நிலைமையோ மோசமாக இருந்தது, காற்றும் அலைகளும் பெரும் இரைச்சலோடு இருந்தது. இயேசு இரைகிற காற்றையும், அலைகளையும் பார்த்து "இரையாதே அமைதலாயிரு" என்றுச் சொன்னார்.

சொன்ன அடுத்த வினாடியே கடல் அலைகளும் காற்றும் அமைதலாக ஆனது. இதைப் பார்த்த சீஷர்கள் ஆச்சரியப்பட்டனர். இவர் சாதாரண மனிதன் கிடையாது, இயற்கையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் கடவுளின் மகன் என்று முழுமையாக நம்பினார்கள்.

இன்றைக்கும் இயேசு நிறைய மனிதர்களுடைய வாழ்க்கையில் வீசும் புயலை அடக்கி சமாதானம் கொடுத்து வருகிறார்.

இயேசுவால் செத்தவர்களையும் உயிரோடு

ஒருமுறை இயேசுவின் நண்பனாகிய லாசரு என்பவர் உடல் நலம் சரியில்லாமல் போனார். மரித்தும் விட்டார். இயேசுவுக்கு சொல்லி அனுப்பினார்கள். இயேசு வருவதற்கு நான்கு நாளாகியது. அதற்குள்ளாக ஒரு குகை கல்லறையில் லாசருவை அடக்கம் செய்துவிட்டார்கள்.

இயேசு வந்தபோது கல்லறையை மூடியிருந்த கல்லை புரட்டிப் போடச் சொன்னாங்க. எல்லாரும் இயேசுவிடம், ‘‘ஐயா வேண்டாம், லாசரு செத்து நான்கு நாளாயிற்று, இப்போது உடல் புழுவைத்து நாற்றம் எடுக்கும்’’ என்றுச் சொன்னார்கள். இயேசு

எழுப்ப முடியும் என்பது உனக்குத் தெரியுமா?

ஆம் ☐ இல்லை ☐

அவர்களைப் பார்த்து, "விசுவாசம் உள்ளவர்களாக இருங்கள்" என்றுச் சொல்லி, கல்லைப் புரட்டச் சொன்னார். கல்லை புரட்டினார்கள். இயேசு உரத்த சத்தமாய் "லாசருவே வெளியே வா" என்றுச் சொன்னார்.

உடனே ஒரு அதிசயம் நடந்தது. செத்து போயிருந்த லாசருவின் உடலில் திரும்ப உயிர் வந்தது. லாசரு எழுந்து குகை கல்லறையிலிருந்து வெளியே வந்தார். எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம்! பின்பு லாசரு பல வருடங்கள் உயிர் வாழ்ந்தார்.

அது சரி, இயேசு நம் வீட்டிற்கு வந்தால் சந்தோஷம்

அநியாயமாய் வரி வசூல் பண்ணும் ஒரு குள்ளமான மனிதன் இருந்தான். அவன் பெரிய பணக்காரனாய் இருந்தான். அவன் பெயர் சகேயு. அவன் அநியாயமாய் சம்பாதிப்பதினால், யாருக்கும் அவனை பிடிக்காது. நம்மை யாருக்கும் பிடிக்காது என்றால் நமக்கு கஷ்டமாக இருக்கும் அல்லவா! அதுபோலத் தான் சகேயுவுக்கும் இருந்தது.

ஒருநாள், சகேயு வாழ்ந்த ஊர் வழியாக இயேசு வந்துக் கொண்டிருந்தார். இதைக் கேள்விப்பட்ட நிறைய மக்கள், கூட்ட கூட்டமாய் இயேசுவைப் பார்க்கக் கூடி வந்தார்கள். சகேயுவுக்கும் இயேசுவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை வந்தது. குள்ளமாக இருப்பதால் சகேயுவால் இயேசுவைப் பார்க்க முடியவில்லை. ஏமாந்து போன சகேயு சுற்றிப் பார்த்தான். உயரமாக ஒன்றுமில்லை, மரங்கள் மட்டும் அங்கிருந்தது. சகேயு ஒரு திட்டம் போட்டார். நான் இந்த மரத்தில் ஏறினால் இயேசுவை பார்த்துவிடலாம் என்று உடனே மரத்தில் ஏறிவிட்டான். இயேசு வரும்வரை காத்திருந்து இயேசுவை

கிடைக்கும் என்பது உனக்குத் தெரியுமா?

ஆம் ☐ இல்லை ☐

கண் குளிரப் பார்த்தான். இப்படிப் பார்த்துக் கொண்டிருக்கையில் இயேசு மரத்தின் அடியில் நின்று அண்ணார்ந்து சகேயுவைப் பார்த்தார். சகேயுவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

இயேசு சகேயுவைப் பார்த்து, “சகேயுவே கீழே இறங்கி வா, இன்றைக்கு நான் உன் கூட உன் வீட்டில் சாப்பிட விரும்புகிறேன்” என்றார். எல்லாராலும் வெறுத்து ஒதுக்கப்பட்ட சகேயுக்கு இயேசு பாராட்டின அன்பு ஆச்சரியத்தை தந்தது. உடனே கீழே இறங்கி வந்து இயேசுவை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். செல்லும் வழியில் இயேசுவிடம், தான் செய்த எல்லா தவறுகளையும் சொல்லி மனந்திரும்பினான்.

அநியாயமாய் சம்பாதித்தப் பணங்களை திரும்ப அவர்களிடமே, பல மடங்குகாக திருப்பிக் கொடுத்து விடப் போவதாகக் கூறினான். இதைப் பார்த்து சுற்றியிருந்த மக்கள் ஆச்சரியப்பட்டனர். அன்றிலிருந்து சகேயு ஒரு நல்ல சந்தோஷமான வாழ்க்கை வாழ்ந்தார்.

அது சரி, தவறுகள் செய்து வாழ்ந்தால், நமக்கு என்னவாகும்

ஒரு பணக்காரன் ஒருவன் இருந்தான். அவனுடைய வீட்டிற்கு முன்பாக லாசரு என்ற ஏழை மனிதனும் வாழ்ந்து வந்தான். இந்த லாசரு ஏழையாய் இருந்தபடியால், உணவு வாங்க பணம் கிடைக்கவில்லை, மருந்து வாங்க காசு இல்லை, தங்குவதற்கு வீடு இல்லை. ஆகவே உணவுக்கு பிச்சை எடுத்தார். அந்தப் பணக்காரர் வீட்டில் இருக்கும் மீதி சாப்பாட்டை கொட்டும் போது, அதை எடுத்து சாப்பிட்டு வந்தான். அந்தப் பணக்காரன் ஒருவேளை சாப்பாடு கூட இந்த ஏழை லாசருக்கு கொடுப்பதில்லை.

பாவங்கள் மன்னிக்கப்படாமல் வாழ்ந்தால்,
என்று உனக்குத் தெரியுமா?

ஆம் ☐ இல்லை ☐

இந்த ஏழையை திட்டி விரட்டி விரட்டி விட்டார் அந்தப் பணக்காரன். லாசரு தெருவில் வாழ்ந்து வந்ததால் உடல் எல்லாம் புண்கள் இருந்தது. அந்தப் புண்களை நாய்கள் வந்து நக்குமாம், பாவம் இல்லையா!

நாட்கள் சென்றது, இரண்டு பேரும் செத்துப் போனார்கள். மனிதன் செத்துப் போனவுடன் அவனுடைய உடல் பூமியிலும், ஆவி கடவுளிடமும் செல்லும். அப்படியே பணக்காரனுடைய ஆவி நியாயம் விசாரிக்கும் கடவுளிடம் சென்றது.



காலமெல்லாம் ஏழையாய் இருந்த லாசருக்கு அந்த பரலோகம் கிடைத்தது. காலமெல்லாம் பணக்காரனாய் இருந்து, பாவமான வாழ்க்கை வாழ்ந்து வந்த இந்த பணக்காரனுக்கோ நரகம் தான் கிடைத்தது. நரகத்தில் அவன் பட்ட பாடுகளுக்கு அளவே இல்லை. பாம்பு, தவளை போன்றவைகள் அவனுடைய மூக்கு, வாய், காதுகளுக்குள் போய் வேதனைப்படுத்தியது. தீ அவனை சுட்டெரித்தது, வேதனை அடைந்தான். ஐயோ! அம்மா!! என்று கதறினான். ஆனால் அவனுக்கு உதவி செய்வதற்கு யாருமில்லை. அந்த நரகத்திலிருந்த சாத்தான், பிசாசுகள் அவனை கொடுமைப்படுத்தின, தண்ணீர் தாகம் வேறு அதிகமாய் எடுத்தது.

யாராவது ஒரு சொட்டு தண்ணீராவது தரமாட்டாங்களா? என்று சுற்றும் முற்றும் பார்த்து வேதனையோடு அலறிக்கொண்டிருந்தான். மேலே அண்ணார்ந்து பார்க்கும்போது பரலோகம் ஜொலித்தது. அதில் தன் வீட்டின் முன்பு பிச்சை எடுத்துக் கொண்டிருந்த லாசரு பரலோகத்தில் ஆபிரகாமின் மடியில் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்தான்.

உடனே இந்தப் பணக்காரன் ஆபிரகாமிடம் கத்தி கதறினான். “ஐயா, உங்கள் மடியிலிருக்கிற லாசருவை எனக்கு நன்றாகத் தெரியும். எனக்கு இங்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. ஆகவே அவனுடைய விரலினால் தண்ணீரைத் தொட்டு எனக்குத் தரச் சொல்லுங்கள்” என்று கெஞ்சினான்.

ஆபிரகாம் அதற்கு என்ன பதில் சொன்னாங்க தெரியுமா? “லாசரு இருக்கும் பரலோகத்திலிருந்து யாரும் நரகத்திற்கு வரமுடியாது. அதேபோல நரகத்திலிருந்து யாரும் பரலோகத்துக்கும் வரமுடியாது. நீ பூமியில் வாழும்போது, உன் மனம் போன போக்கில் வாழ்ந்தாய், கடவுளை நினைத்துக் கூடப் பார்க்க உனக்கு நேரமில்லாதிருந்தது. இந்த லாசரு ஏழையாக இருந்தாலும் யாருக்கும் எந்த தீங்கும் செய்யவில்லை. ஆகவே இனி லாசரு எப்போதும் பரலோகத்தில் சந்தோஷமாக இருக்க போகிறார்” என்று. இதைக் கேட்ட பணக்காரன் மீண்டும் கெஞ்சினான். “ஐயா! அப்படியென்றால் எனக்கு ஐந்து சகோதரர்கள் இன்னும் பூமியில் வாழ்கிறார்கள். அவர்களிடம் லாசருவை அனுப்பி கடவுள் பிள்ளைகளாக வாழ அவர்களுக்குச் சொல்ல சொல்லுங்க” என்று கெஞ்சினான்.

அதற்கு ஆபிரகாம், “இதுவும் முடியாத ஒரு காரியம். பூமியில் கடவுளுக்கு ஊழியம் செய்யும் நிறைய தேவ மனிதர்கள் தினமும் இந்த எச்சரிப்பைக் கொடுத்து கொண்டேதான் இருக்காங்க. அவர்களுடைய சொல்லைக் கேட்டு மனந்திரும்பினால், பாவ மன்னிப்பு அடைந்தால் அவர்களுக்கு பரலோகம் நிச்சயம் உண்டு” என்றுச் சொல்லிவிட்டார். பாவம் அந்த பணக்காரன் ஒவ்வொரு நிமிடமும் வேதனையை அடைந்துக் கொண்டே துடித்துக் கொண்டிருந்தான்.

இயேசு
நம்முடைய
பாவங்களை
எல்லாம்
சிலுவையில்
சுமந்து
தீர்த்துவிட்டார்
இதை நம்புகிறாயா?

ஆம் ☐ இல்லை ☐

பாவங்களை நாம் தொடர்ந்து செய்துக் கொண்டே இருந்தால், நமக்குத் தண்டனை உண்டு என்றும் பரிசுத்த வேதத்தில் எழுதியுள்ளது. சாத்தானை தண்டிக்க உண்டாக்கப்பட்ட எரிநரகத்தில் பாவிகளும் தூக்கி எறியப்படுவார்களாம். ஆகவேதான் பாசம் நிறைந்த கடவுள் பரலோகத்திலிருந்து இறங்கி, மனிதனாக வந்து, தன் உயிரையே கொடுத்தார். இந்த பாவ மன்னிப்பைப் பற்றி தெரிந்தும் வேண்டாம் என்று விலகிப் போகிறவர்களுக்கு என்ன நடக்கும் என்று உங்களுக்கேத் தெரியும்.

இதை வாசிக்கிற உனக்கு இப்போது உண்மை புரிந்து இருக்கும் என்று நம்புகிறேன். இது இயேசு உன் மீது பாசம் கொண்டு உனக்கு தெரிவிக்கும் ஒரு அன்பான அழைப்பு. நரகத்திற்கு ஒரு மனிதன் போவது இயேசுவுக்கு தாங்காது. ஆகவேதான் அவர் தன்னுடைய உயிரையே நமக்காக சிலுவையில் கொடுத்து, உயிரோடு எழுந்தார். இன்று உனக்காகவும் எனக்காகவும் ஜெபம் செய்து கொண்டேயிருக்கிறார், பாசத்தோடு உன்னை அரவணைத்து, தன் பிள்ளையாக்கி உனக்கு ஒரு புது வாழ்வு கொடுக்க விரும்புகிறார்.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் உன்னை கடவுள் இயேசு அதிகமாக நேசிக்கிறார், அது உனக்குத் தெரியுமா? நீ உன் அம்மாவின் வயிற்றில் உருவாகுவதற்கு முன்னமே, இயேசுவுக்கு உன்னை நன்றாகத் தெரியும் என்ற உண்மை உனக்குத் தெரியுமா? உன் அம்மாவும் அப்பாவும் உன்னை கைவிட்டாலும் இயேசு உன்னை கைவிடவே மாட்டாங்க, அது உனக்குத் தெரியுமா?

பாவ மன்னிப்பு அடைய, உன் பெயரும், பரலோகத்தில் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட நீ செய்ய வேண்டும் என்று உனக்குத் தெரியுமா?

மிகவும் எளிது, மனந்திரும்பி, நாம் செய்த பாவங்களையெல்லாம் இயேசுவிடம் ஒவ்வொன்றாகச் சொல்லி மன்னிப்பு கேட்க வேண்டும். யாரிடமாவது நாம் தவறுகள் செய்திருந்தால் அவர்களிடம் போய் மன்னிப்பு கேட்க வேண்டும். அவ்வளவு தான் இயேசுவின் இரத்தம் நமது பாவங்களை கழுவி பரிசுத்தமாக்கும். நம்மை இயேசு தன்னுடைய சொந்த பிள்ளையாக ஏற்றுக் கொண்டு, எல்லா ஆசீர்வாதங்களையும் தருவார்.

நாம் மரித்தப் பின்பும் பரலோக வாழ்வு தருவார். உன் வாழ்வில் நீ கடவுளுக்கு இடம் கொடுத்திருக்கிறாயா? இல்லையென்றால் ஏன் தாமதிக்க வேண்டும்? இப்போதே இயேசு கிறிஸ்துவிடம் ஜெபம் பண்ணு.

இயேசுவின் பிள்ளையாக தொடர்ந்து வாழ நாம் என்ன செய்ய வேண்டும் என்று உனக்கு தெரியுமா?

1. நாம் தினமும் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க வேண்டும்.
2. நாம் தினமும் ஜெபம் செய்ய வேண்டும்.
3. ஆலயம் தவறாமல் செல்ல வேண்டும்.
4. கடவுளுடைய விருப்பம் செய்ய வேண்டும்.
5. நல்ல பிள்ளையாக பரிசுத்த ஆவியின் வல்லமை பெற்று வாழ வேண்டும்.

இதை வாசித்து முடித்த பின்பு உனது அனுபவங்களை எங்களுக்கு நீ எழுதி அனுப்பலாம். உனக்கு இயேசு கிறிஸ்துவின் வாழ்கை வரலாறு அடங்கிய புத்தகம் நாங்கள் அனுப்பி வைப்போம்.

மேலும் தொடர்புக்கு:

Jesus Redeems MINISTRIES

Nalumavadi - 628211, Thoothukudi Dist.,
Tamilnadu, India. Phone: +91 4639-220022.
Mobile: +91 81110 71000.
Email: info@jesusredeems.org